முக்கிய வார்த்தைகள்:
சோதனை
துன்பப்படுதல்
அருள்
நன்றி தெரிவித்தல்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**நோன்புப் பெருநாள் பிரசங்கம்**

**21 மார்ச் 2026 / 01 ஷவ்வால் ஹிஜிரி 1447**

**<u>உலக வாழ்க்கை : மனிதகுலத்துக்கு ஒரு சோதனை</u>**

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ

اللهُ أَكْبَرُ كُلَّمَا سَبَّحَهُ الْمُسَبِّحُونَ، اللهُ أَكْبَرُ كُلَّمَا حَمِدَهُ الْحَامِدُونَ، اللهُ أَكْبَرُ كُلَّمَا وَحَّدَهُ الْمُوَحِّدُونَ، وَكَبَّرَهُ الْمُكَبِّرُونَ، وَقَامَ بَيْنَ يَدَيْهِ الْقَائِمُونَ، وَرَكَعَ لِعَظَمَتِهِ الرَّاكِعُونَ، وَسَجَدَ لِجَلَالِهِ السَّاجِدُونَ،

الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَنْعَمَ عَلَيْنَا بِصِيَامِ أَفْضَلِ شَهْرٍ، وَقَدَّرَ لَنَا الِالْتِقَاءَ بِلَيْلَةِ الْقَدْرِ، وَيُحِيطُنَا بِمَوَدَّتِهِ فِي يَوْمِ عِيدِ الفِطْرِ.

وَأَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا اللهُ الرَّؤُوفُ الْمَنَّانُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ الشَّكُورُ الْحَنَّانُ. اللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِه، وَأَصْحَابِهِ وَأَتْبَاعِهِ، وَسَلِّمْ تَسْلِيمًا. أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا الْمُسْلِمُوْنَ، أُوْصِيْكُمْ وَنَفْسِيْ بِتَقْوَى اللهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

**எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே! ரஹிமகுமுல்லாஹ் [அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

ரமதான் மாதம் முழுவதிலும் வணக்க, வழிபாட்டுச் செயல்களில் ஈடுபட்டு, நமது "தக்வா" [அல்லாஹ்வின் மீதான பக்தியை] பலப்படுத்திக் கொள்வதில் நாம் வெற்றியை அடைந்ததைக் கொண்டாடும் வகையில், **இப்புனிதமிக்க** காலைப் பொழுதில் இங்கு நாம் ஒன்று கூடியுள்ளோம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நம்மீது பொழிந்துள்ள எண்ணற்ற **அருட்கொடைகளுக்காக** நாம் அல்லாஹ்வுக்கு **நன்றி செலுத்துகிறோம்.** குறிப்பாக, ரமதானில் அல்லாஹ்வின் அன்பு மற்றும் அவனது கிருபையின் மூலம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ள நமது "ஈமான்" [ஓரிறை நம்பிக்கை] எனும் **அருளை** நமக்கு வழங்கியதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அல்ஹம்துலில்லாஹ், ரமதானில். பள்ளிவாசல்கள், ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர் என அனைத்து தரப்பு மக்களால் நிரம்பி, அவை பிரகாசமாக இருந்ததை நாம் கண்டோம். நம்மில் பலர், அல்லாஹ்வின் கிருபையை அடைவதற்காகக் கடுமையான முயற்சிகளைச் செய்தார்கள்; நமது சமூக ஊடகங்கள் மார்க்க விஷயங்களால் நிரம்பியிருந்தன; திருக்குர்ஆனுடனான நமது தொடர்பு மீண்டும் ஒருமுறை நமக்கு நெருக்கமானதாக அமைந்ததை நாம் உணர்ந்தோம்; திருக்குர்ஆனை ஓதுதலும் அதில் சிந்தனை செய்தலும் நமது உள்ளங்களுக்கும் உணர்வுகளுக்கும் புத்துயிர் அளித்தன.

"இஃப்தார்" உணவுகளைத் தயார் செய்து, அவற்றைப் பகிர்ந்து கொண்டதன் மூலமும், தேவைப்பட்டவர்களுக்கு அவற்றை எடுத்துச் சென்று கொடுத்ததன் மூலமும், தான தர்மங்கள் மற்றும் பங்களிப்புகளைச் செய்து கொண்டதன் மூலமும் நாம் நம்முடைய ஒற்றுமையுணர்வை வெளிப்படுத்தினோம். நமது இளைஞர்கள் நற்காரியங்களைச் செய்வதில் ஆர்வத்துடன் காணப்பட்டார்கள்; அதன் மூலம், நமது சமுதாயத்தில்

ஈமானின் [ஓரிறை நம்பிக்கையின்] உயிரோட்டம் தொடர்ந்து செழித்து வளர்கின்றது எனும் நம்பிக்கை நமக்கு ஏற்பட்டது. அல்லாஹ்வின் நாட்டப்படி, இச்சிறப்பம்சங்களெல்லாம் வருங்கால சந்ததியினருக்கு பாதுகாக்கப்படட்டுமாக!

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ وَللهِ الحَمْدُ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

ரமதான் மாதத்தில் வணக்க வழிபாட்டுச் செயல்களை நாம் பரிபூரணமாக நிறைவேற்றி முடித்துள்ளதானது, நமது சொந்த முயற்சியினால் அல்ல; மாறாக, அல்லாஹ் தனது அனைத்து அடியார்கள் மீது பொழிந்துள்ள அன்பு மற்றும் கிருபையின் காரணமாகவே நிறைவேற்றியுள்ளோம். என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் ஒரு ஹதீதில் கூறவில்லையா? அந்த ஹதீதை இமாம்களான புகாரி [ரஹ்], முஸ்லிம் [ரஹ்] ஆகியோர் பின்வருமாறு அறிவித்துள்ளார்கள்: "எவரும், அல்லாஹ்வின் விசாலாமான கிருபையைக் கொண்டே தவிர, தனது சொந்த நற்காரியங்களால் மட்டும் சொர்க்கம் புக முடியாது"

எனவே, இப்புனிதமிக்க காலைப் பொழுதில் அல்லாஹ் நமக்கு அருளியுள்ள அவனது கிருபை மற்றும் அன்பின் அடையாளங்களில் சிந்தனை செய்வோமாக! நாம் கேட்காமலேயே அல்லாஹ் நமக்கு அருளியுள்ள எண்ணற்ற அருட்கொடைகளில் சிந்தனை செய்வோமாக. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, மிகச் சிறந்த வெகுமதிகளாகிய ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கை, இஸ்லாமிய மார்க்கம், பலவித ஆற்றல்கள், நேரம், வாழ்வாதாரம் போன்ற பல அருள்களை நமக்கு வழங்கியுள்ளான். நாம் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் நமது மார்க்கத்தைச் செயல்படுத்துவதற்காக அமைதியையும் நலன்களையும் அல்லாஹ் வழங்கி அருள் புரிந்துள்ளான்.

இவையெல்லாம், அல்லாஹ் தனது கிருபையையும் அன்பையும் நம்மீது பொழிந்துள்ளான் என்பதற்கான ஆதாரமாகும். அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள எண்ணற்ற அருட்கொடைகளுக்கு, எவ்வாறு நம்மால் நன்றி செலுத்த முடியும்? எனச் சிந்திக்க வேண்டும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

ஒருவரது வாழ்க்கையில் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள ஒவ்வொரு விஷயமும், நமது வாழ்நாள், வாழ்வாதாரம், ஓரிறை நம்பிக்கை ஆகிய அனைத்தும் நமக்குச் சோதனைகளாகவும் நம்மிடம் பொறுப்புணர்வை ஏற்படுத்துபவையாகவும் இருக்கின்றன. நம்மைச் சோதிப்பதற்காகவே அல்லாஹ் நம்மைப் படைத்துள்ளான்; நமது முழு வாழ்க்கையும் ஒரு சோதனையாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-முல்க்" எனும் அத்தியாயத்தின் 2-வது வசனத்தில் கூறுகிறான்:

ٱلَّذِى خَلَقَ ٱلْمَوْتَ وَٱلْحَيَوٰةَ لِيَبْلُوَكُمْ أَيُّكُمْ أَحْسَنُ عَمَلًا ۚ وَهُوَ ٱلْعَزِيزُ ٱلْغَفُورُ ﴿٢﴾

பொருள்: உங்களில் எவர் செயல்களால் மிகவும் சிறந்தவர் என்பதைச் **சோதிப்பதற்காக,** அவன் [அல்லாஹ்], மரணத்தையும் வாழ்வையும் ஏற்படுத்துகின்றான்; மேலும் அவன் யாவரையும் மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்.

**اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ.**

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

இக்காலைப் பொழுதில், வாழ்க்கைச் **சோதனைகள்** சம்பந்தமாக இரண்டு பாடங்களை, உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவற்றின்

மூலம் அச்சோதனைகளை நாம் அறிந்து, அல்லாஹ்வுக்கு திருப்தியை ஏற்படுத்தும் வகையில் அவற்றை நம்மால் எதிர்கொள்ள முடியும்.

**<u>முதலாவதாக: ஒவ்வொரு நபரும் பல்வேறு வகையில் சோதிக்கப்படுகிறார்கள்</u>**

அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே! உண்மையில், சமீப காலங்களில் உலக முஸ்லிம் சமுதாயங்களில் சிலருக்கு, பதற்றம் மற்றும் பயத்திற்கிடையே ரமதானைக் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களின் மகிழ்ச்சியும் அமைதியும் சோகமாகவும் தனிமையாகவும் மாறியுள்ளது.

அவர்கள் எதிர்கொள்ளும் சோதனைகளை நினைத்து, நாம் நிச்சயமாகக் கவலை கொள்கிறோம். அப்பாவி மக்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் அமைதி மீண்டும் திரும்ப வேண்டுமென்றும் அல்லாஹ்விடம் நாம் பிரார்த்தனை செய்கிறோம். அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள விதியை நம்புவதில் நாம் நிலைத்து நிற்கின்றோம்; ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் பின்னணியில் பல தத்துவங்கள் உள்ளன எனவும் நம்புகிறோம்.

எனினும், கடுமையான நிலைகளும் துன்பங்களும் எவ்வாறு சோதனைகளாக உள்ளனவோ, அவ்வாறே, நமக்கு அருளப்படும் அருள்களும், இன்பமான வாழ்க்கையும் சோதனைகளாக உள்ளன. சிலர், கடுமையானத் துயங்கள், பற்றாக்குறை மற்றும் வஞ்சிக்கப்படுதல் ஆகியவற்றால் சோதிக்கப்படுகிறார்கள்; எனினும், அவ்வாறு நாம் சோதிக்கப்படவில்லையென்பதற்காக, அல்லாஹ் நம்மைச் சோதிக்க வில்லையென நாம் நினைக்கக் கூடாது. மாறாக, நாம் எளிதாகவும் சுகமாகவும் வாழ்வதும்  நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு அருளும் கூட அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஏற்படுத்தப்படும் ஒரு வகையான சோதனைகளாகும்.

எனவே, நம்மிடம் காணப்படும் **அருள்களும்**, சுகமான வாழ்க்கையும் அல்லாஹ்வின் பார்வையில் நாம் கண்ணியமாக இருக்கின்றோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளன என நினைத்து, நாம் ஏமாந்து விடக் கூடாது. ஒருவரது வாழ்க்கை கடினமானதாகவோ அல்லது எளிதானதாகவோ எப்படி இருந்தாலும், ஒருவரது அந்தஸ்து அல்லாஹ்வின் பார்வையில் தீர்மானிக்கப்படுவது, அவரது உள்ளத்தில் காணப்படும் "தக்வா" எனும் இறை பக்தியின் மூலமாகத் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-ஹுஜுராத்" எனும் அத்தியாயத்தின் 13-வது வசனத்தில் கூறுகிறான்:

إِنَّ أَكْرَمَكُمْ عِندَ ٱللَّهِ أَتْقَىٰكُمْ

பொருள்: "உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர்"

சகோதர, சகோதரிகளே! அல்ஹம்துலில்லாஹ், நாம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் எண்ணற்ற **அருட்கொடைகளால்** அருள் புரியப்பட்டுள்ள சமுதாயமாக இருக்கின்றோம். ஆனால் உலகின் மற்ற பகுதிகளிலுள்ள சமுதாய மக்கள் **துன்பங்கள்** மற்றும் கடினமான நிலைகளை எதிர்கொண்டு வருகிறார்கள். நாமோ அல்லாஹ்வின் கிருபையால் அமைதியான தங்குமிடத்தில், நலமாக வாழ்ந்து வருகிறோம். நம்மிடத்தில் பொருளாதார நிலைத்தன்மை காணப்படுகிறது; நம்மிடம் போதுமான வாழ்வாதாரமும் அவசியத் தேவைகளும் உள்ளன; நமது வருங்காலத்துக்காகத் திட்டமிடும் வாய்ப்பையும் நாம் பெற்றுள்ளோம். கல்வியின் நிலைகள் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகின்றன; நமது பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்துதல் இன்றி, நமது மார்க்கத்தை நம்மால் செயல்படுத்த முடிகிறது. இவையெல்லாம், மிகச் சிறந்த அருள்களாக உள்ளன. அதே சமயம், அவை நமக்குச் சோதனைகளாகவும் உள்ளன; அவற்றுக்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

சில வேளைகளில், நமக்கு ஏற்படுத்தப்படும் கடுமையானத் துயரங்கள் நமது ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையைப் பலஹீனப்படுத்தி விடாது; நமது சுகமான வாழ்க்கை நம்மிடம் எளிதில் கவனச் சிதறலை ஏற்படுத்தி விடாது; நமது தேவையான நிலை, அல்லாஹ்வை விட்டும் நம்மைத் தூரமாக்கி விடாது. ஆனால், நாம் மன நிறைவுடன் இருப்பதானது, அல்லாஹ்வை நாம் மறப்பதற்குக் காரணமாகி விடலாம்.

எனவே, அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள அனைத்து **அருட்கொடைகள்** மூலம் நாம் என்ன செய்ய வேண்டும்? அல்லாஹ் நம்மிடம் ஒப்படைத்துள்ள அமானிதங்களைப் பாதுகாப்பதுடன், அல்லாஹ்வின் மீதான நமது பக்தியையும் அவனுக்கு **நன்றி செலுத்துதலையும்** நாம் எப்படிப் பிரதிபலிப்பது? எனச் சிந்திக்க வேண்டும். குறிப்பாக, ரமதான் எனும் கல்விக்கூடத்தில் பல நல்ல அனுபவங்களை நாம் பெற்ற பின்பு, தொடர்ந்து நம்மைப் பற்றிச் சிந்திப்பதும், அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு ஏற்படுத்தப்படும் **அருள்கள்** அல்லது **சோதனைகள்** ஆகியவற்றை எதிர்கொள்வதற்கு, ரமதானில் நாம் பெற்ற நல்ல மதிப்பீடுகள் என்ன? என நம்மை நாம் கேட்டுக் கொள்வதும் அவசியமாகும்.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

இந்நிலையாகிறது, **நாம் இரண்டாவது பாடத்தைப் பெறுவதன் பால் நம்மை அழைத்துச் செல்கின்றது; அதுதான், "நமக்கு ஏற்படும் சோதனைகளின் விஷயத்தில் நம்மிடம் ஏற்படும் எதிர்வினைகள் தான் நமது வெற்றியைத் தீர்மானிக்கின்றன்" என்பதாகும்.**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"ஓரிறை நம்பிக்கையாளரின் நிலை எந்தளவு அற்புதமாக உள்ளது! அவரது அனைத்து விவகாரங்களும் அவருக்கு நன்மையாக அமைந்து விடுகின்றன;

அவருக்கு ஏதாவதொரு நன்மை கிடைத்தால், அதற்காக அவர் **நன்றி செலுத்துகிறார்;** அது அவருக்கு நன்மையாக அமைந்து விடுகிறது. அவர் துன்பத்தை எதிர்கொண்டால், அவர் பொறுமையாக இருக்கின்றார்; அதுவும் அவருக்கு நன்மையாக அமைந்து விடுகின்றது. [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்]

தற்போது ஓதப்பட்ட ஹதீதாகிறது, ஒரு ஓரிறை நம்பிக்கையாளர் சோதனைகளை எதிர்கொள்ளும் போது எவ்வாறு பதிலளிப்பார் என்பதையும், நல்ல செய்திகளையும் அருள்களையும் அவர் அடையும் போது என்ன செய்வார் என்பதையும், சோதனைகள் மற்றும் துரதிர்ஷ்டமான நிலைகளால் தாக்கப்பட்டால் என்ன செய்வார் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

சோதனைகளை எதிர்கொள்ளும் போது ஒரு முஸ்லிம் தனது நல்ல முயற்சிகளைக் கைவிட மாட்டார்; நிராசையாக மாட்டார்; கவலை அவரை மிகைத்து விடாது. அவர் தனது உறவுகளைத் தொடர்ந்து பாதுகாத்து வருவார். சூழ்நிலைகளை முன்னேற்றவும், தொடர்ந்து "இஹ்ஸான்" [நன்மைகளைப்] பரப்பவும் முயற்சிப்பார். அவர் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொள்வார்; அவனிடமே உதவியைத் தேடுவார். தொடர்ந்து முயற்சி செய்து, வருங்காலத்துக்காகத் தன்னை தயார் செய்வார்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 155-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَلَنَبْلُوَنَّكُم بِشَيْءٍ مِّنَ ٱلْخَوْفِ وَٱلْجُوعِ وَنَقْصٍ مِّنَ ٱلْأَمْوَٰلِ وَٱلْأَنفُسِ
وَٱلثَّمَرَٰتِ ۗ وَبَشِّرِ ٱلصَّٰبِرِينَ ﴿١٥٥﴾

பொருள்: ”நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் **சோதிப்போம்**; ஆனால் பொறுமையுடையோருக்கு [நபியே!] நீர் நன்மாராயங் கூறுவீராக!”

தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, ஒரு முஸ்லிம் சோதனைகளை எதிர்கொள்ளும் போது, அவரிடம் பொறுமை எனும் எதிர்வினை தான் ஏற்பட வேண்டும் எனக் கூறுகிறது. ஒரு ஓரிறை நம்பிக்கையாளர், **சோதனைகளைத்** தோல்வியாகக் கருதமாட்டார். மாறாக, அவற்றை, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் வெகுமதிகளை அடைவதற்கான வாய்ப்புகளாகக் கருதுவார். எனவே, சவால்களை நாம் எதிர்கொள்ளும் போது, அவற்றுக்கு எப்படி நாம் பதிலளிக்கின்றோம் என்பதைப் பொருத்து நமக்கு வெற்றி, தோல்விகள் அமைகின்றன; அதுதான், சோதனைகளை எதிர்கொள்ளும் ஓரிறை நம்பிக்கையாளருக்கு உண்மையான வெற்றியை வழங்குவதாகும்.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ وَللهِ الْحَمْدُ.

**அன்பிற்குரிய சக முஸ்லிம்களே!**

மற்ற நாடுகளில் வாழும் நமது சகோதர, சகோதரிகளை விட நல்ல நிலைமையில் வாழும் முஸ்லிம்கள் எனும் ரீதியில், அல்லாஹ்வின் அருட்கொடைகளை நன்றியுணர்வுடன் பெற்றுக் கொள்வது அவசியமாகும். அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள **அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்துவதற்கு** சில வார்த்தைகளை மட்டும் நாம் மொழிந்தால் போதுமாகாது என அறிஞர்கள் தெரிவித்துள்ளார்கள். பின்வரும் விளக்கங்களில் கவனம் செலுத்துங்கள்:

முதலாவதாக: **நன்றி செலுத்துதல்** என்பது நமது உள்ளங்களிலிருந்து புறப்பட்டு வர வேண்டும். ஒவ்வொரு வாழ்வாதாரமும் **அருள்களும்**

அல்லாஹ்வின் புறத்திலிருந்து நமக்கு வழங்கப்படுகின்றன; அவனையே நாம் வணங்கி, வழிபட வேண்டும்; அவனிடமே நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும்; ஆதரவு வைக்க வேண்டும் எனும் சிந்தனை நமது உள்ளத்தில் காணப்பட வேண்டும்.

இரண்டாவதாக: ”அல்ஹம்துலில்லாஹ்” எனக் கூறி, நாவின் மூலமும் நாம் **நன்றி தெரிவிக்க** வேண்டும். அல்லாஹ் தான், நமக்கு வழங்குபவன் என்பதை ஏற்று, நமது வாழ்வாதாரத்தில் **அபிவிருத்தியை** வழங்குமாறு அவனிடமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக: **நன்றி செலுத்துதல்** நமது செயலிலும் பிரதிபலிக்க வேண்டும்; நாம் அடைந்து கொள்ளும் ஒவ்வொரு உதவியும் அருளும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நம்மிடம் ஒப்படைக்கப்படும் அமானிதங்கள் ஆகும்; நம்மிடமுள்ள ஒவ்வொரு **அருட்கொடைக்கும்** நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை நாம் உணர்ந்து, அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள பாதுகாப்பு, நலம், சுதந்திரம், கல்வியறிவு, வாழ்வாதாரம், வருவாய் ஆகிய **அருள்கள்** மூலம் நாம் என்ன செய்ய வேண்டும்? எனச் சிந்திக்க வேண்டும்.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**

அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் **அடையாளமாக**, ரமதானுக்குப் பின்பும் தொடர்ந்து நற்காரியங்களைச் செய்யுமாறும், *ரஹ்மத்* [கிருபை காட்டுதல்], *இஹ்ஸான்* [கருணைச் சிந்தனையை வெளிப்படுத்துதல்] ஆகிய சிறந்த மதிப்பீடுகளைப் பாதுகாக்குமாறும் மீண்டும் ஒருமுறை இப்பிரசங்க மேடை நம்மனைவருக்கும் நினைவூட்டிக் கொள்கிறது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் ”ஸபா” எனும் அத்தியாயத்தின் 13-வது வசனத்தில் கூறுகிறான்:

ٱعۡمَلُوٓاْ ءَالَ دَاوُۥدَ شُكۡرٗاۚ وَقَلِيلٞ

பொருள்: ”தாவூதின் சந்ததியினரே! **நன்றி செலுத்தும்** வகையில் நற்காரியங்களைச் செய்யுங்கள்”

**சக முஸ்லிம்களே**!

நற்காரியங்களைத் தொடர்ந்து செய்வதன் மூலமாகவும், அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கமாக்கிக் கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள அருள்களைப் பயன்படுத்துவோமாக.

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்கள் போதித்துள்ளதன் பிரகாரம், மகிழ்ச்சியாக இருப்போமாக! அதே சமயம், நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு அருள்களும் கூட, சோதனைகள் தான் என்பதை மறந்து விட வேண்டாம். நாம் அடைந்து கொள்ளும் ஒவ்வொரு அருளும் நம்மை மேலும் பணிவானவர்களாகவும், தாராள மனப்பான்மை கொண்டவர்களாகவும், இஹ்ஸான் எனும் உபகாரச் சிந்தனையைப் பரப்புபவர்களாகவும் ஆக்கட்டுமாக!

எல்லாம் வல்ல அல்லாஹ், அமைதியையும் அனைத்து வித நலன்களையும் பாதுகாப்பானாக; நம்மனைவருக்கும் ஆற்றலையும் சாந்தி, சமாதானத்தையும் வழங்குவானாக! நாம் நிறைவேற்றிய நற்காரியங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வானாக!

اللّٰهُ أَكْبَرُ، اللّٰهُ أَكْبَرُ، اللّٰهُ أَكْبَرُ وَ لِلّٰهِ الْحَمْدُ.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

اللهُ أَكْبَرُ،اللهُ أَكْبَرُ،اللهُ أَكْبَرُ

اللهُ أَكْبَرُ،اللهُ أَكْبَرُ

اللهُ أَكْبَرُ،اللهُ أَكْبَرُ

الْحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ الْعَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّيا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الْأَحْيَاءِ مِنهُم وَالْأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا الْبَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالْمِحَنَ، مَا ظَهَرَ

مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ الْبُلْدَانِ عَامَّةً، يَارَبَّ الْعَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ، وَإِيتَاءِ ذِي الْقُرْبَى وَيَنْهَى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ الْعَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.